<tr><td>1</td><td>Date of meeting of IDC</td><td>July 5, 2024</td></tr>
<tr><td>2</td><td>Name of the Target Company ("TC")</td><td>Agro Tech Foods Limited</td></tr>
<tr><td>3</td><td>Details of the Offer pertaining to the Target Company</td><td>Open Offer is being made by the Acquirer along with the PACs to the public shareholders of Agro Tech Foods Limited at a price of INR 578.03 per fully paid-up equity share to acquire up to 63,36,009 equity shares of face value of INR 10/- each representing 26.00% of the voting share capital of the TC in accordance with the applicable provisions of the SEBI (SAST) Regulations.
Offer Price: INR 578.03 per fully paid-up equity share
The IDC reviewed the following:
a. Public Announcement dated February 29, 2024 ("PA")
b. Detailed Public Statement dated March 06, 2024 (the "DPS");
c. Draft Letter of Offer dated March 13, 2024 (the "DLOF"); and
d. Letter of Offer dated June 28, 2024 (the "LOF");</td></tr>
<tr><td>4</td><td>Name of the Acquirer and PAC with the acquirer</td><td>- Zest Holding Investments Limited ("Acquirer")
Registered office: Apex House, Bank Street, TwentyEight, Cybercity, Ebene 72201, Mauritius. Tel. No.: +230 467 3000 Fax: +230 467 4000; ALONG WITH
- Zest Investments Limited ("PAC 1")
Registered office: Apex House, Bank Street, Twenty Eight, Cybercity, Ebene 72201, Mauritius. Tel. No.: +230 467 3000 Fax: +230 467 4000,
- Samara Capital Partners Fund III Limited ("PAC 2")
Registered office: Apex House, Bank Street, TwentyEight, Cybercity, Ebene 72201, Mauritius. Tel. No.: +230 467 3000 Fax: +230 467 4000,
- Infinity Holdings ("PAC 3")
Registered office: C/o Apex Fund & Corporate Services (Mauritius) Ltd. Lot 15 A3, First Floor, Cybercity, Ebene 72201, Mauritius. Tel. No.: +230 404-3900 Fax: +230 454-6824; and
- Infinity Holdings Sidecar 1 ("PAC 4")
Registered office: C/o Apex Fund & Corporate Services (Mauritius) Ltd. Lot 15 A3, First Floor, Cybercity, Ebene 72201, Mauritius. Tel. No.: +230 404-3900 Fax: +230 454-6824</td></tr>
<tr><td>5</td><td>Name of the Manager to the Offer</td><td>Centrum Capital Limited
Level 9, Centrum House, CST Road, Vidyanagari Marg, Kalina, Santacruz (E), Mumbai 400098, India
Tel: +91 22 4215 9224 / 9816 Fax: +91 22 4215 9444
E-mail: agrotech.openoffer@centrum.co.in
Contact Person: Ms. Pooja Sanghvi/ Mr. Tarun Parmani
Website: www.centrum.co.in
SEBI Registration No.: INM000010445
CIN: L65990MH1977PLC019986</td></tr>
<tr><td>6</td><td>Members of the Committee of Independent Directors</td><td><table><tr><td>Name of the Independent Director</td><td>Position in the Committee</td></tr><tr><td>Mr. Sanjaya Kulkarni</td><td>Chairperson</td></tr><tr><td>Mr. Lt Gen D B Singh</td><td>Member</td></tr><tr><td>Mr. Arun Bewoor</td><td>Member</td></tr><tr><td>Mr. Narendra Ambwani</td><td>Member</td></tr><tr><td>Ms. Veena Vishindas Gidwani</td><td>Member</td></tr></table></td></tr>
<tr><td>7</td><td>IDC Member's relationship with the Company (Director, Equity shares owned, any other contract / relationship), if any</td><td>The members of the IDC are Independent Directors on the Board of Directors of the Company. Except Ms. Veena Vishindas Gidwani, who holds 500 equity shares of the Company, the other members of the IDC do not hold any equity shares of the Company. Further, none of the Members of the IDC have entered into any contract or any relationship with the Company.</td></tr>
<tr><td>8</td><td>Trading in the Equity shares/ other securities of the Company by IDC Members</td><td>None of the members of IDC have traded in any of the equity shares / other securities of the Company:
(i) during the twelve months period preceding the date of the DPS;
(ii) during the period between the date of the DPS and the date of this recommendation (i.e., July 5, 2024)</td></tr>
<tr><td>9</td><td>IDC Member's relationship with the Acquirer or PACs (Director, Equity shares owned, any other contract / relationship), if any.</td><td>a. All the members of IDC are Independent Directors on the Board of the Target Company and have no relationship with the Acquirer and/or the PACs.
b. None of the members of IDC holds any equity shares or other securities of the Acquirer and/or the PACs.
c. None of the members of IDC has any contracts / relationship with the Acquirer and/or the PACs.</td></tr>
<tr><td>10</td><td>Trading in the Equity shares/ other securities of the Acquirer by IDC Members</td><td>None of the members of IDC either hold equity shares in the Acquirer or PACs or have traded in any of the equity shares/other securities of the Acquirer or PACs during the 12 month period preceding the date of the DPS.</td></tr>
<tr><td>11</td><td>Recommendation on the Open offer, as to whether the offer is fair and reasonable</td><td>Based on the review of the PA, DPS, DLOF and LOF as released/issued by the Manager to the Offer on behalf of the Acquirer and PACs:
Akasam Consulting Private Limited, SEBI Registered Category 1 Merchant Banker appointed by the IDC to provide its independent opinion with respect to the offer price, has issued the fairness opinion dated July 2, 2024, that has;
(i) opined that the offer price, i.e. INR 578.03 (being the highest price prescribed), is in accordance with the Regulation 8(2) of SEBI (SAST) Regulations; and
(ii) provided its opinion on the fair price per equity share of the Target Company and opined that the offer price is fair and reasonable.
Based on the above, the IDC is of the opinion that, as on the date of this recommendation, the offer price of INR 578.03 per equity share offered by the Acquirer is;
(a) in accordance with the regulation prescribed under the SEBI (SAST) Regulations; and
(b) the open offer appears to be fair and reasonable.
Accordingly, the public shareholders of the Company are advised to independently evaluate the Open Offer and take an informed decision in their best interests regarding tendering the equity shares held by them in the Open Offer.</td></tr>
<tr><td>12</td><td>Summary of reasons for Recommendation
(IDC may also invite attention to any other price e.g. Company's website where its detailed recommendations along with written advise of the independent advisor, if any can be seen by the shareholder)</td><td>The IDC has reviewed the PA, the DPS, the DLOF, LOF and other relevant documents as released and published by Acquirer and PACs.
The IDC has sought an external advice from Akasam Consulting Private Limited, SEBI Registered Category 1 Merchant Banker, who provided a fairness opinion dated July 2, 2024 that the Open Offer price offered by the Acquirer together with the PACs is in accordance with regulation prescribed under the SEBI (SAST) Regulations and is thus fair and reasonable.
Based on the above, IDC is of the opinion that the offer price of INR 578.03 (Indian Rupees Five Hundred Seventy Eight and paisa zero three only) per equity share is in compliance with the EBI (SAST) Regulations and the Open Offer appears to be fair and reasonable.
The shareholders are advised to independently evaluate the open offer and take an informed decision, whether to tender or not to tender their equity shares in the Open Offer.
This statement of recommendation will be available on the website of the Company at: www.atfoods.com</td></tr>
<tr><td>13</td><td>Disclosure of the Voting Pattern</td><td>The recommendations were unanimously approved by the members of the IDC present at the meeting held on July 5, 2024</td></tr>
<tr><td>14</td><td>Details of Independent Advisors, if any.</td><td>Akasam Consulting Private Limited, SEBI registration No. INM000011658, Category I Merchant Banker</td></tr>
<tr><td>15</td><td>Any other matter(s) to be highlighted</td><td>None</td></tr>
</table>

To the best of our knowledge and belief, after making proper enquiry, the information contained in or accompanying this statement is, in all material aspects, true and correct and not misleading, whether by omission of any information or otherwise and includes all the information required to be disclosed by the Target Company under the SEBI (SAST) Regulations.

For and on behalf of the Committee of Independent Directors of

Agro Tech Foods Limited

Sd/-

Chairperson and Independent Director

Sanjaya Kulkarni

Place: Mumbai

Date: July 5, 2024

CONCEPT

ஆவடி அருகே பயங்கரம்

மதுபோதை தகராறில் வாலிபரை வெட்டி கொன்ற நண்பர் கைது

ஒரே அறையில் தங்கி இருந்தனர்

ஆவடி, ஜூலை.8–

சென்னை அயப்பாக்கத்தை சேர்ந்தவர் ஜோ (வயது25). இவர் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு ஆவடி அருகே உள்ள நந்தவன மேட்டூர் பகுதியை சேர்ந்த நண்பரான கார்த்திகேயன் என்பவருடன் சென்று தங்கினார். கார்த்திகேயன் ஆட்டோ ஓட்டி வருகிறார்.

இந்த நிலையில் நேற்று இரவு ஜோ, கார்த்திகேயன் மற்றும் அவரது நண்பர்கள் சிலர் அறையில் ஒன்றாக மதுகுடித்தனர். அப்போது அவர்களுக்கு இடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் ஆத்திரம் அடைந்த கார்த்திகேயன் ஜோவை சரமாரியாக அரிவாளால் வெட்டினார். இதில் தலை, கழுத்தில் பலத்த வெட்டுக் காயம் அடைந்த ஜோ சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் பலி யானார். இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த மதுகுடித்த நண்பர்கள் அங்கிருந்து தப்பி சென்று விட்டனர். இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்த கார்த்திகேயன் இன்று அதிகாலை 3 மணியளவில் போலீஸ்கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு நண்பன் ஜோ வெட்டு காயங்களுடன் இறந்து கிடப்பதாக தகவல் தெரிவித்தார். ஆவடி போலீசார் விரைந்து வந்து ஜோவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கீழ்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக கார்த்தி கேயனை போலீசார் கைது செய்தனர். கொலைக்கான காரணம் குறித்து அவரிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். அவர்களுடன் மதுகுடித்த மற்ற நண்பர்கள் பற்றிய விபரத்தையும் சேகரித்து வருகிறார்கள்.

கொள்ளையர்கள் புகுந்த மதுக்கடையை படத்தில் காணலாம்.

லாக்கரை உடைக்க முடியாததால்

டாஸ்மாக் கடையில் மதுபாட்டில்களை அள்ளிச்சென்ற கும்பல்

ரூ.12 லட்சம் தப்பியது

மதுராந்தகம், ஜூலை.8–

அச்சரப்பாக்கம் அருகே பெரும் பேர்கண்டிகை டாஸ்மாக் மதுக்கடை செயல்பட்டு வருகிறது. நேற்று இரவு வழக்கம் போல் விற்பனை முடிந்ததும் ஊழியர்கள் கடையை பூட்டி சென்றனர். இன்று அதிகாலை 2.30 மணி அளவில் மர்ம கும்பல் மதுக்கடையின் ஷட்டர் பூட்டை உடைத்து உள்ளே புகுந்தனர். அவர்கள் அங்கி ருந்த லாக்கரை உடைக்க முயன்றும் முடியாததால் மதுபாட்டில்களை பெரிய பையில் அள்ளினர்.

அந்த நேரத்தில் சப்–இன்ஸ்பெக்டர் இளங்கோ வன் மற்றும் போலீசார் அப்பகுதியில் வாகனத்தில் ரோந்து வந்தனர். உடனே மதுக்கடை யில் இருந்த கும்பல் அங்கிருந்து மதுபாட்டில்களுடன் தப்பி ஓட்டம் பிடித்தனர். போலீ சார் பிடிகக முயன்றும் முடிய வில்லை. போலீசார் மதுக்க டைக்குள் வந்து பார்த்தபோது அங்கிருந்த லாக்கரை கொள்ளையர்கள் உடைக்க முயன்று இருப்பது தெரிந்தது. மேலும் கடையில் மின் இணைப்பை துண்டித்தும், கண்காணிப்பு காமிராவை உடைத்தும் கைவரிசை காட்டி உள்ளனர். லாக்கரை உடைக்க முடியா ததால் மதுபாட்டில்களை பையில் அள்ளி சென்று உள்ளனர். கொள்ளையர்கள் தப்பி ஓடியபோது ஒரு பையில் இருந்த மதுபாட்டில்களை விட்டு சென்று இருக்கி றார்கள். மேலும் அவர்கள் அணிந்து இருந்த 2 சட்டைகளையும் விட்டு சென்றுள்ளனர். இதனை கைப்பற்றி போலீ சார் விசாரணை நடத்தி வருகிறார்கள். லாக்கரில் ரூ.12 லட்சம் விற்பனை பணம் இருந்தது. லாக்கரை உடைக்க முடியாததால் அந்த பணம் தப்பியது. கைரேகை நிபுணர்கள் அங்கு பதிந்துஇருந்த ரேகைகளை ஆய்வு செய்தனர். இது குறித்து அச்சரப்பாக்கம் போலீசார் வழக்கு பதிவு செய்து மேலும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல்

பா.ம.க.வின் வெற்றியே தமிழ்நாட்டு மக்களின் வெற்றி

டாக்டர் ராமதாஸ் அறிக்கை

சென்னை, ஜூலை.8–

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அங்கமாக பாட்டாளி மக்கள் கட்சி போட்டி யிடுகிறது. தொகுதி மக்களால் நன்கு அறியப்பட்ட, அவர்களின் சுக, துக்கங்க ளில் பங்கு கொண்ட சி.அன்புமணி பாட்டாளி மக்கள் கட்சியின் வேட்பா ளராக போட்டியிடுகிறார்.

விக்கிரவாண்டி என்பது சமூக நீதிக்காக தியாகம் செய்த மண். அது வாக்கு களை விற்கிற வாண்டி அல்ல என்பதை அத்தொகுதி மக்கள் நிரூபித்திருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் மக்கள் அளிக்கப் போகும் தீர்ப்பு எத்தகை யதாக இருக்கும் என்பதற்கு திமுக அலுவலகங்களில் திருப்பி வீசப்படும் பொருள்கள் தான் சான்று ஆகும்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு ஏன் வாக்களிக்கக் கூடாது என்பதற்கு ஆயிரம் கார ணங்களை என்னால் பட்டி யலிட முடியும். அவற்றில் சிலவற்றை மட்டும் முன் வைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம் – ஒழுங்கை பாதுகாக்கத் தவறியது. சாதாரண மக்களால் வாழ்க்கை நடத்த முடியாத அளவுக்கு உயர்ந்தி ருக்கும் விலை வாசியை கட்டுப்படுத்தாதது. நியாய விலைக் கடைகளில் மக்க ளின் அடிப்படைத் தேவையான துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றைக் கூட கடந்த 3 மாதங்களாக வழங்க முடியாத அவல நிலையை ஏற்படுத்தியது.

தமிழக அரசுக்கு அதி காரம் இருந்தும் சமூக நீதியை நிலைநாட்ட சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மறுப் பது. தமிழர்களுக்கு மட்டுமே வேலை வழங்குவதற்கான சட்டத்தை கொண்டு வராதது, தமிழ்நாட்டின் வேலைவாய்ப்புகளை வட மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு தாரை வார்ப்பது, அரசு பள்ளி களில் ஒன்றரை லட்சம் ஆசிரியர் பணியிடங்களை நிரப்பாமல் வைத்திருப்பது, அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட் டத்தை செயல்படுத்த மறுப்பது என்று தி.மு.க. அரசின் வேதனைப் பட்டியல் இன்னும் நீண்டது ஆகும். தி.மு.க.வுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்க வேண்டும். விக்கிர வாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க.வை வீழ்த்துவது தான் அந்த அதிர்ச்சி வைத்தியம் ஆகும். விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு கிடைக்கும் தோல்வி தான் அதன் அகங்காரத்தையும், மக்கள் விரோத மனநிலை யையும், சமூக அநீதி மனப்பான்மையையும் தகர்க்கும். விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சியின் வெற்றி என்பது ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்க ளின் வெற்றி, ஜனநாய கத்தின் வெற்றி, சமூக நீதியின் வெற்றி.

இவ்வாறு டாக்டர் ராமதாஸ் கூறி உள்ளார்.

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில் இயற்கை வளங்கள் துறையின் சார்பில், ஏரி, குளம் மற்றும் கண்மாய்களில் இருந்து களிமண், வண்டல் மண்ணை விவசாய பயன்பாட்டிற்கும், மண்பாண்டம் செய்வதற்கும் கட்டணமின்றி எடுத்து பயன்பெறுவதற்கான அனுமதி ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி, சுரங்கத்துறை ஆணையர் சரவணவேல்ராஜ் கலந்து கொண்டனர்.

தி.மு.க. ஆட்சியில் விக்கிரவாண்டி தொகுதி முன்னேற்றம் கண்டுள்ளது

தமிழக அரசு பெருமிதம்

சென்னை, ஜூலை.8–

தமிழக அரசு வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறி இருப்பதாவது:–

முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் "எல்லோருக்கும் எல்லாம்" என்ற தத்து வத்துடன் திராவிடமாடல் ஆட்சியை இந்தியாவிற்கே வழிகாட்டும்வண்ணம் சிறப்பாக நடத்தி வருகிறார்.

எல்லா மாவட்டங்களி லும் அரசின் திட்டங்கள் சிறப்பாக நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலினின் காலை உண வுத் திட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் 63 ஆயிரத்து 168 மாணவர்களும், விக்கிர வாண்டியில் 10,651 மாண வர்களும் சூடான, சுவை யான சிற்றுண்டி உட் கொண்டு கல்வியைத் தொடர்கின்றனர்.

நான் முதல்வன் திட்டத் தில் 39,186 இளைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

1லட்சத்து 43 ஆயிரத்து 33 முதியோருக்கு மாத ஓய்வூதியம் ரூ.314.67 கோடி, முதல்வரின் முகவரி திட்டத்தில் 1,24,356 மனுக்களுக்குத் தீர்வு, சுயதொழில் தொடங்கிட கடன் ரூ.1,388.67 கோடி, 16ஆயிரத்து 128 மகளிர்க்கு சுயஉதவிக்குழு கடன் ரத்து ரூ.24.43 கோடி, 20 ஆயிரத்து 799 குடும்பங்களுக்கு நகைக் கடன் தள்ளுபடி ரூ.90.13 கோடி, 30ஆயிரத்து 798 பேருக்கு உழவர் பாது காப்புத் திட்ட ஓய்வூதியம் ரூ.67.75 கோடி, 3 ஆயிரத்து 781 ஏழைப் பெண்களுக்கு 14.66 கோடி திருமண நிதியுடன், ரூ.16.52 கோடி மதிப்பில் 30.248 கிலோ தங்க நாணயங்கள், புதுமைப் பெண் திட்டத்தில் 9 ஆயிரத்து 488 மாணவி களுக்கு மாதம் ரூ.1,000 கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, 3 லட்சத்து 49 ஆயிரத்து 257 குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000, என வழங்கி மக்க ளைக் காக்கும் மகத்தான அரசாக திகழ்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள வன்னியர் உட்பட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர்மரபினருக்கும் 1989–ல் 20 சதவீத இட ஒதுக்கீடு வழங்கியது தி.மு.க. இதனால் 1988–1989–ம் ஆண்டில் மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப் பட்ட மிகவும் பிற்படுத்தப் பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 68 என்பது இந்த இட ஒதுக்கீடு வழங்கப்பட்டபின் 1989–1990–ல் 187 ஆக உயர்ந்தது.

இவர்களில் வன்னிய மாணவர்களின் எண் ணிக்கை 74–ஆக ஏறத்தாழ மூன்று மடங்கு உயர்ந்தது.

இதேபோல், பொறியியல் கல்லூரியில் 1988–1989இல் 354 ஆக இருந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் சேர்க்கை 1989–1990–ல் 685–ஆக உயர்ந்தது. இவர்களில் வன்னிய மாணவர்களின் எண்ணிக்கை 109 என்பது 292 ஆக ஏறத்தாழ 3 மடங்கு உயர்ந்தது.

இட ஒதுக்கீடு கோரி, வன்னியர் சங்கத்தினர் நடத்திய போராட்டத்தில் உயிர்நீத்த 27 பேரின் குடும்பங்களுக்கு 1998-ல் தலா 3 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கியது தி.மு.க. அத்துடன், இந்த 27 சமூக நீதிப் போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் 1500 ரூபாய் அனு மதித்ததும் தி.மு.க.தான்.

அந்தக் குடும்ப ஓய்வூதியத்தை நவம்பர் 2006 முதல் மாதம் 1,500 ரூபாயில் இருந்து 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கியதும் தி.மு.க.தான்.

ராமசாமி படையாச்சியார் திருவுருவச்சிலை 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்ச் செல வில் சென்னை கிண்டியில் அமைத்து திறந்து வைக்கப் பட்டதும் தி.மு.க. ஆட்சியில் தான்.

காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூகநீதிப் போராளிகளுக்கு ரூ.5 கோடியே 70 லட்சம் மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்ட பம் அமைத்திட ஆணை யிட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விழுப்புரம் மாவட்டத்தி லும் சிறப்பான பல திட்டங்கள் செயல்படுத்தப் படுவதால், இம்மாவட்டம் முன்னேற்றத் திசையில் நடைபோடுகிறது. விக்கிர வாண்டி சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

'நோ பார்க்கிங்' பகுதியில் இரு சக்கர வாகனம் நிறுத்தப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

எழும்பூர் ரெயில் நிலைய வடக்கு பகுதியில்

இரு சக்கர வாகன நிறுத்தம் மாற்றப்பட்டதால் பயணிகள் தவிப்பு

நீண்ட தூரம் நடக்க வேண்டி இருப்பதால் கண்ட இடங்களில் நிறுத்தி செல்கின்றனர்

சென்னை, ஜூலை.8–

சென்னை எழும்பூரில் இருந்து தென் மாவட்டத் துக்கு மட்டுமின்றி வட மாநிலங்களுக்கும் தற்போது ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும் நீண்ட தூரம் செல்லக் கூடிய பல ஆயிரக்கணக்கான பயணி கள் மற்றும் லட்ச கணக்கான புறநகர் மின்சார ரெயில் பயணிகள் இந்த நிலையத்தை பயன்படுத்தி வருகின்றனர். காந்தி இர்வின் சாலையில் உள்ள எழும்பூர் ரெயில் நிலையத்தின் முகப்பு வாயிலை விட வடக்கு பகுதியான தினத்தந்தி அலுவலகம் அருகில் உள்ள நுழைவுப் பகுதியை மக்கள் அதிகளவில் பயன் படுத்து கின்றனர்.

அங்கு செயல்பட்ட பஸ் நிலையம் கடந்த சில மாதங் களுக்கு முன்பு வெளியேற் றப்பட்டு தற்போது கார் நிறுத்தம் பகுதியாக பயன் படுத்தப்படுகிறது. வசதியானவர்கள் பயன் படுத்தும் கார்களுக்கு மிகப் பெரிய அளவில் பார்க்கிங் வசதி அளிக்கப்படுகிறது. ஆனால் ஏழை, நடுத்தர மக்கள் அதிகமாக பயன் படுத்தும் இரு சக்கர வாக னங்கள் நிறுத்துவதற்கு போதுமான இடம் ஒதுக்க வில்லை. நோ பார்க்கிங் பகுதியில் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி செல்கின்றனர். பார்க்கிங் வசதி பகுதியில் நிறுத்தப் படும் மோட்டார் சைக்கிள் களை விட 'நோ பார்க்கிங்' பகுதியில் அதிகளவில் வாகனங்கள் நிறுத்தப் படுகின்றன.

இரு சக்கர வாகனங் களுக்கு 24 மணி நேரத்திற்கு ரூ.30 வசூலிக்கப்படுகிறது. 4 மணி நேரத்திற்கு ரூ.10, 8 மணி நேரத்திற்கு ரூ.15, 12 மணி நேரத்திற்கு ரூ.20 நிர்ணயிக் கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எழும்பூர் வடக்கு பகுதியில் செயல் பட்ட இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தை கடந்த வெள்ளிக்கிழமை மாற்றம் செய்யப்பட்டது.

காந்தி இர்வின் சாலை யில் ஏற்கனவே செயல்பட்டு வரும் இரு சக்கர வாகன நிறுத்தமிடத்தில் நிறுத்த வேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. ரெயில்வே கட்டுமானப் பணிகள் நடைபெறுவதால் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளது.

இதையடுத்து 3 நாட்க ளாக வடக்குப் பகுதியில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு அனுமதி இல்லை. ஏற்கனவே நிறுத் தப்பட்டுள்ள வாகனங்களை வெளியில் எடுத்து செல்கிறார்கள்.

காந்தி இர்வின் சாலை யை விட பூந்தமல்லி சாலை யில் உள்ள வாகன நிறுத் தத்தை அதிகளவில் மக்கள் பயன்படுத்தி வந்தனர். அங்கு இரு சக்கர வாகனங் கள் தற்போது நிறுத்த முடியாத நிலையில் பயணி கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர்.

காந்தி இர்வின் சாலை யில் பார்க்கிங் செய்து விட்டு நீண்ட தூரம் நடக்க வேண்டும். மின்சார ரெயில் பயணிகளுக்கு இது வசதி யாக இல்லை.

இதனால் வடக்கு ரெயில் நிலைய பகுதியில் மோட்டார் சைக் கிளை நிறுத்த பார்க்கிங் வசதி ஏற்படுத்தி தர வேண் டும் என்று வலியுறுத்து கின்றனர்.

வடக்கு பகுதியில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்த அனுமதிக்காததால் கண்ட இடங்களில் விட்டு செல் கிறார்கள். நோ பார்க்கிங் பகுதியில் 100–க்கும் மேலான மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட் டுள்ளன. அவற்றை அகற்ற முடியாத நிலையில் ரெயில்வே நிர்வாகம் உள்ளது.

வடக்கு பகுதியில் செயல் பட்ட டிக்கெட் முன்பதிவு மையம் கட்டிடம் அரு கில் ஆட்டோக்கள் அத்து மீறி சென்று பயணிகளை ஏற்றுகின்றனர்.

எந்த பக்கம் பார்த்தாலும் ஆட்டோக்களை ஆங் காங்கே நிறுத்தி பொது மக்களுக்கு இடையூறு செய்கின்றனர்.

ஆட்டோக்களை நிறுத்து வதற்கு ஏதாவது ஒரு இடத்தை தேர்வு செய்து முறைப்ப டுத்தினால் பயணி களுக்கு வசதியாக இருக் கும். இரு சக்கர வாகனங் களை வடக்கு பகுதியில் நிறுத்துவதற்கு ரெயில்வே நிர்வாகம் இடம் ஒதுக்கி தர வேண்டும்.

பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்தி தருவது தான் ரெயில்வேயின் நோக்கமே தவிர சிரமத் தையும் கஷ்டத்தையும் ஏற்படுத்தக்கூடாது என்று புறநகர் பயணிகள் ஆதங்கப் படுகின்றனர்.

யுவன் ஷங்கர் ராஜாவின் இசையை கொண்டாட

'மின்மினி' செயலி பிரத்யேக போட்டி அறிவிப்பு

சென்னை, ஜூலை.8–

இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜாவின் இசையை கொண் டாட 'மின்மினி' செயலி பிரத்யேக போட்டியை அறிவித்துள்ளது.

'ஷி இஸ் எ கில்லர்' பாடல்

உலகின் முதல் தமிழ் 'ஹைப்பர் லோக்கல்' செயலியான மின்மினி பிரபல இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜாவின் 'மியூசிக் லேபிள்' நிறுவனமான 'யு1 ரெகார்ட்ஸ்' உடன் இணைந்து 'ஹேஷ்டேக்' 'யு1 வைப்ஸ்' என்கிற சிறப்பான போட்டியை அறிவித்துள் ளது. யுவன் ஷங்கர் ராஜா வெளியிட்டுள்ள தனிப்பாட லான 'ஷி இஸ் எ கில்லர்' என்கிற பாடலை கொண் டாடுவதற்காக 'மின்மினி' செயலி இந்த போட்டியை அறிவித்துள்ளது.

கடந்த 5–ம் தேதி தொடங் கிய இந்த போட்டி ஆகஸ்டு 4–ம் தேதி வரை நடைபெ றும். 'ஷி இஸ் எ கில்லர்' என்கிற பாடலுக்கு உங்கள் படைப்பாற்றலை வெளிப்ப டுத்தும் விதமாக வீடியோக் களை எடுத்து அதை 'ஹேஷ் டேக் யு1 வைப்ஸ்' என்கிற 'ஹேஷ்டேக்' சேர்த்து 'மின் மினி'யில் பதிவிட வேண் டும்.

இந்த போட்டி குறித்து 'மின் மினி' செயலியின் செயல் துணைத்தலைவர் ஸ்ரீராம் கூறும்போது, 'யு1 வைப்ஸ்' என்கிற இந்த போட்டிக்காக இசையமைப் பாளர் யுவன் சங்கர் ராஜா வுடன் இணைவது மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும் அளிக்கிறது. இந்த போட்டி மூலம் தாங்கள் ரசிக்கும் இசைக்கு ஏற்ப தங்களின் படைப்பாற்றலை வெளிப்ப டுத்தவும், தனித்துவமான ஒரு அனுபவத்தை பெறவும் எங்களது பயனர்களுக்கு வாய்ப்பளிக்கிறோம். இந்த போட்டியால் யுவனின் இசையை கொண்டாடுவ தோடு, ரசிகர்களுக்கு அவர்களின் படைப்பாற் றலை வெளிப்படுத்த ஒரு புதிய தளத்தையும் வழங்கு கிறோம். இதன் மூலம் ரசிக் கும்படியான, அற்புதமான 'கன்டென்டு'களை காண ஆர்வமாக உள்ளோம்' என் றார்.

படைப்பாற்றல்

இந்த போட்டியில் கலந் துகொள்ள 'கூகுள் பிளே ஸ்டோர்' மற்றும் 'ஆப்பிள் ஆப் ஸ்டோரில்' இருந்து 'மின்மினி' செயலியை பதி விறக்கம் செய்து 'ஷி இஸ் எ கில்லர்' என்கிற பாட லுக்கு உங்கள் படைப்பாற் றலை வெளிப்படுத்தும் வித மாக வீடியோக்களை எடுத்து அதை 'ஹேஷ்டேக் யு1 வைப்ஸ்' என்கிற 'ஹேஷ் டேக்' சேர்த்து 'மின்மினி'யில் பதிவிட வேண்டும்.

இந்த போட்டி குறித்து இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா வெளியிட் டுள்ள காணொலி தற்போது இணையத்தில் வைரலாக பரவி வருகிறது. அந்த காணொலியில், 'மின்மினி செயலியின் பயனர்களுக்கு ஆச்சரியமூட்டும் ஏராள மான பரிசுகள் காத்துக் கொண்டிருக்கிறது. எனவே, 'ஷி இஸ் எ கில்லர்' பாடலை பயன்படுத்தி வீடியோக் களை உருவாக்கி அதை 'மின்மினி' செயலியில் பதி விடுங்கள்' என கேட்டுக் கொண்டுள்ளார். யுவன் ஷங்கர் ராஜா எழுதி, இசை யமைத்து இயக்கியுள்ள 'ஷி இஸ் எ கில்லர்' என்கிற பாடல் ஒரு பெண்ணை பார்த்த உடனே சட்டென ஒரு இளைஞனுக்குள் ஏற் படும் காதலை வெளிப்படுத் தும் விதமாக உருவாக்கப் பட்டுள்ளது.

3 லட்சம் 'டவுன்லோடு'

கடந்த ஜனவரி 2024–ல் அறிமுகமான 'மின்மினி' செயலி இதுவரை 3 லட்சத் திற்கும் அதிகமான 'டவுன் லோடு'களை பெற்றுள்ளது. மேலும் சமீபத்தில் நடை பெற்று முடிந்த ஐ.பி.எல். 2024 போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடைய அதிகாரபூர்வ 'சோசியல் மீடியா பார்ட்னர்' ஆக செயல்பட்டது. சி.எஸ்.கே. தொடர்பாக ஏராளமான போட்டிகளை நடத்தி 400–க்கும் அதிகமான போட்டிக் கான டிக்கெட்டுகளை தனது பயனாளர்களுக்கு வழங்கியுள்ளது.

'மின்மினி' செயலியில் தற்போது ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் அரபு நாடுகள் உள்ளிட்ட உலகின் ஏராளமான பகுதி களை சேர்ந்த பத்தாயிரத் திற்கும் அதிகமான சிறிய, நடுத்தரமான மற்றும் குறு அளவிலான தமிழ் 'கன் டென்ட்' படைப்பாளர்கள் இருக்கிறார்கள். மேலும், உலகம் முழுவதும் திறமை யான புதிய படைப்பாளர் களை உருவாக்கும் முயற்சி யிலும் 'மின்மினி' ஈடுபட் டுள்ளது.

முகவரி கேட்ட தகராறில் காவலாளி மீது தாக்குதல்

சென்னை, ஜூலை.8–

சென்னை, அண்ணாநகர், முதலாவது மெயின் ரோட்டை சேர்ந்தவர் முருகேசன் (வயது60). கட்டுமான நிறுவனம் ஒன்றில் காவலா ளியாக வேலைபார்த்து வருகிறார். இவர் நேற்று இரவு தேனாம்பேட்டை வரதராஜபுரம் பிரதான சாலை வழியாக நடந்து சென்ற போது அங்குள்ள இருசக்கர வாகனம் பழுதுநீக்கும் கடையில் இருந்த 2 பேரிடம் வரதராஜபுரம் செல்வதற்கான வழிகேட்டார். இதில் ஏற்பட்ட தகராறில் அவர்கள் மோட்டார் சைக்கிளின் சக்கரத்தால் முருகேசனின் தலையில் தாக்கினர். இதில் பலத்த காயம் அடைந்த முருகேசன் உயிருக்கு ஆபத்தான நிலையில் கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். இதுகுறித்து தேனாம்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து மெக்கானிக்கு களான அசாம்மா நிலத்தை சேர்ந்த கார்கேஸ்வர், திருவொற்றியூரை சேர்ந்த அப்பாஸ் ஆகிய 2 பேரை கைது செய்து விசாரித்து வருகிறார்கள்.

காஞ்சிபுரத்தில் வாராஹி லட்சுமி சில்க்ஸ்

வாராஹி லக்ஷ்மி சில்க்ஸ், காஞ்சிபுரத்தின் மையப் பகுதியில் தனது புதிய ஷோரூமை தொடங்கியுள்ளது. காஞ்சிபுரம் காந்தி சாலையில் அமைந்துள்ள இந்த ஷோரூம் தரமான பட்டு மற்றும் பாரம்பரிய கைவினைப் பிரியர்களுக்கு சொர்க்கமாக இருக்கும் என்று கோபி தெரி வித்தார். திறப்பு விழாவில் சுமா ஹாரிஸ் ஜெயராஜ், டாக்டர் சீமா ஆலிஸ் மேத்யூ, ஐஸ்வர்யா அர்ஜூன் ஆகியோர் பங்கேற்றனர்.

குட்கா வழக்கு சிறப்பு கோர்ட்டுக்கு மாற்றம்

சென்னை, ஜூலை.8–

தமிழகத்தில் தடையை மீறி அதிகாரிகளுக்கு லஞ்சம் அளித்து குட்கா பொருள்கள் விற்கப்படுவதாக வந்த புகாரில் டெல்லி சி.பி.ஐ. வழக்கை விசாரித்து வருகின்றது. இதில் மாதவராவ், சீனிவாசராவ், உமாசங்கர் குப்தா, உணவு பாதுகாப்புத்துறை அதிகாரி செந்தில்முருகன், மத்திய கலால்துறை அதிகாரி நவநீத கிருஷ்ண பாண்டியன், சுகாதாரத்துறை அதிகாரி சிவக்குமார் ஆகிய 6 பேர் மீது வழக்கு பதிவு செய்த சி.பி.ஐ. இவர்களுக்கு எதிராக சென்னை சி.பி.ஐ. நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இந்நிலையில் முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி. ரமணா, சென்னை முன்னாள் போலீஸ் ஆணையர் உள்ளிட்ட மத்திய, மாநில அரசு உயர் அதிகாரிகளுக்கு எதிராக கூடுதல் குற்றப்பத்திரிகை கடந்த மே மாதம் தாக்கல் செய்தது. இந்த வழக்கு சி.பி.ஐ. கோர்ட்டு நீதிபதி எழில் வளவன் முன் இன்று மீண்டும் விசா ரணைக்கு வந்தது. பின்னர் வழக்கில் முன்னாள் மற்றும் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளதால் வழக்கு விசாரணை சென்னையில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டிற்கு மாற்றி உத்தரவிட்ட நீதிபதி விசாரணையை ஆகஸ்ட் 2 தேதிக்கு ஒத்தி வைத்தார்.